**மே - 14**

**"அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் வளருகிறவராயிருங்கள்." - எபே 4 : 15**

கிருபையில் வளருகிறதென்றால் என்ன? கர்த்தரோடு ஆவியின் ஐக்கியத்தின் மூலமாகவும், சொந்த நெருங்கிய பழக்கத்தின் மூலமாகவும் அவருடைய தயவில் வளருவது இவ்விதமாகக் கிருபையில் வளருவதும், அறிவில் வளராமலிருப்பதும் கூடாத காரியம். ஏனென்றால், இப்படிப்பட்ட அன்னியோன்னியத்தின் நோக்கமே அதிகமான பூரண அறிவிலும், அவரோடு பழகுவதிலும் நம்மை கட்டுவதே அதாவது தேவ ஏற்பாட்டின் நெருங்கிய ஐக்கியத்துக்குள் நம்மை கொண்டு வரவும் அந்த ஏற்பாட்டை செய்து முடிப்பதில் "அவருடன் உடன் வேலையாட்களாக" இருக்கும் சலுகையை நமக்கும் கொடுக்கவுமே. ஆகையால், நாம் கர்த்தரை நேசிக்கவும், அவருக்குக் கீழ்ப்படியவும், அவருடைய தயவில் வளரவும், விரும்பினால், அவருடைய எழுதப்பட்ட வார்த்தையே நமது அன்றாட தியானமும் படிப்புமாக இருக்கிறது. இவ்விதமாக நாம் அறிவில் வளருகிறோம். **-Z ’03, 200 (R 3215)**

கிறிஸ்தவன் செய்ய வேண்டிய வேலை, தேவனுடைய வார்த்தையை வெளிப்படையாகத் தெரியப்படுத்துவதாகும். விசேஷமாக, உள்ளெண்ணத்திலிருந்தும், தன்னலமற்ற அன்பைத் தெரிவித்தலிலும், அது நிறைவேற்றப்பட வேண்டும். இவ்விதமாக சத்தியத்தைக் கொடுப்பவன் எல்லா நற்கிரியையிலும் அபிவிருத்தியடையவும், தன்னுடைய ஸ்தானத்தில் முற்றுப்பெற வளரவும், ராஜ்யத்தின் ஒரு சுதந்திரவாளியாகவும், அவனை சாத்தியமாக்கத்தக்கதாக, நமது தலையாகிய கிறிஸ்துவினால் அவனுக்கு இவ்விதமான அனுபவங்கள் கொடுக்கப்படுகின்றன. **- P '36, 64.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

சக 8:16; 2கொரி 4:2; எபே 4:25; சங் 32:2; யோவா 1:47; ரோம 12:9; 1பேது 1:22; 2:2; 1யோவா 3:18; எபே 2:21; 2பேது 3:18; எபே 1:21,22; 5:23; கொலோ 1:18,19; 2:19.

**கோபுர வாசிப்பு : Z ’16, 323 (R 5977)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் கர்த்தருடைய சித்தத்துக்கு இசைவாக அல்லது எதிராக பலி செலுத்துவதிலிருந்து விலகி இருந்தேனா? எந்தச் சந்தர்ப்பங்களில் ? ஏன் ? எப்படி?